DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**CC.No.05/2015**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW 4 | Caste | : | |
| Name | : | அய்யனார் | Age | : | |
| FN. | : | | Occupation | : | |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 20th day of January 2023.
20.01.2023.

முதல் விசாரணை :-

நான் இராமேஸ்வரம் இராமநாதசுவாமி நகரில் வசித்து வருகிறேன். நான் தற்போது நகராட்சியில் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது. அது அ.சா.ஆ.2 ஆகும். மேற்படி கையெழுத்தை 2015ம் வருடம் நான் பணிபுரியும் இடத்தில் வைத்து போலீசார் வந்து கேட்டதன் பேரில் கைது செய்தேன். மேலும், என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது. அது அ.சா.ஆ.3 ஆகும். எதற்காக போட்டேன் என்று நியாபகம் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.
(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

போலீசார் விசாரணையில் கடந்த 13.02.2015ம் தேதி காலை 03.15 மணிக்கு நகர் காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் எதிரி ஜெனிஸ் என்பவரை நானும், விஸ்வநாதன் என்பவரும் சாட்சியாக இருந்தபோது, விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. அப்போது எதிரி எந்த வித அச்சுறுத்தலோ, துன்புறுத்துதலோ இன்றி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார்கள் என்றும், அதன் தொடர்ச்சியாக அன்றைய தினம் அதிகாலை 04.00 மணிக்கு வழக்கின் எதிரி ஜெனிஸ் என்பவர் எடுத்து ஆஜர் செய்த நீல கல் வைத்த மாங்காய் டாலர் உள்ள சுமார் 142 கிராம் எடையுள்ள தங்க செயின் ஒன்று, நீல கல் வைத்த பூ டாலர் உள்ள சுமார் 150 கிராம் எடை உள்ள தங்க செயின் ஒன்று, பெரிய கல் வைத்த சுமார் 31 கிராம் எடை உள்ள கை செயின் ஒன்று, சுமார் 6 கிராம் எடையுள்ள சிறிய கைசெயின் ஒன்று மற்றும் சுமாார் 61 ரிகாம் எடையுள்ள சின்ன மயில் டாலர் செயின் ஒன்றும், சுமார் 284 கிராம் எடையுள்ள 22

வளையல்கள், 28 கிராம் எடையுள்ள 3 கல் தோடு ஜிமிக்கியையும், சுமார் 28 கிராம் எடையுள்ள மோதிரங்கள் நான்கும், சுமார் 7 1/2 பவுன் எடையுள்ள லெட்சுமி டாலர் போட்ட இரட்டை வடம் செயின் ஒன்று, மற்றும் சுமார் 39 கிராம் எடையுள்ள ஸ்பிரிங் செயின் இரண்டையும் எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்றால் சரியல்ல. அந்த அத்தாட்சியில் நான் கையெழுத்து செய்தேன் என சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.